# மெட்ரோ ரயில் நிலையத்தில் இசை, நாட்டிய விழா



அர்ச்சனா கந்தன் குழுவினரின் பரத நாட்டியம்.

சென்னை, டிச. 25–

மெட்ரோ நிறுவனம் சார்பில், சென்னையில் உள்ள பல்வேறு ரயில் நிலையங்களில், இசை, கலை விழா நடந்து வருகிறது.

சென்ட்ரல் மெட்ரோ நிலையத்தில், நேற்று முன்தினம் இரவு, பரதநாட்டியம் மற்றும் நாதஸ்வர கச்சேரி நடந்தது. இதில், மயிலாப்பூர் கார்த்திகேயன் குழுவினரின் நாதஸ்வர கச்சேரியுடன், அர்ச்சனா கந்தன் குழுவினரின் பரதநாட்டியம் நிகழ்ச்சியும் நடந்தது.

இதை, பயணியர் பலர் ஆர்வத்தோடு ரசித்துச் சென்றனர். தொடர்ந்து, அண்ணா நகர் கிழக்கு மெட்ரோ நிலையத்தில் இன்று மாலை, 6:00 மணிக்கு, கலையகம் குழுவினரின் தப்பாட்டம் நடக்கிறது.

வரும், 27ம் தேதி, மாலை, 6:30 மணிக்கு, அசோக் நகர் மெட்ரோ நிலையத்தில், இசை நிகழ்ச்சி மற்றும் தப்பாட்டம் நிகழ்ச்சி நடக்க உள்ளது. ஜன., 1ல், வடபழநி ரயில் நிலையத்தில், மாலை, 6:00 மணிக்கு, தப்பாட்டம் நிகழ்ச்சி நடத்த, மெட்ரோ நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.